# இன்றைய இறைவார்த்தை

# 19–05–2015

**பாஸ்கா காலம் – 7ஆம் வாரம் – செவ்வாய்**

**முதல் வாசகம்:**

ஆண்டவர் இயேசு எனக்குக் கொடுத்த பணியை நிறைவேற்றி
என் வாழ்க்கை ஓட்டத்தை முடிக்கிறேன்.

**திருத்தூதர் பணிகள் நூலிலிருந்து வாசகம்: 20 : 17 – 27**

அந்நாள்களில் பவுல் மிலேத்துவிலிருந்து எபேசுக்கு ஆள் அனுப்பி, திருச்சபையின் மூப்பர்களை வரவழைத்தார். அவர்கள் வந்ததும் அவர்களிடம் அவர் கூறியது: "நான் ஆசியாவுக்கு வந்து சேர்ந்த நாள்முதல் இந்நாள்வரை எவ்வாறு உங்களிடம் நடந்துகொண்டேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். யூதர்களுடைய சூழ்ச்சிகளால் எனக்கு ஏற்பட்ட சோதனைகளின்போது மிகுந்த மனத்தாழ்மையோடும் கண்ணீரோடும் ஆண்டவருக்குப் பணிபுரிந்தேன். நன்மை பயக்கும் ஒன்றையும் உங்களுக்கு நான் அறிவிக்காமல் விட்டுவிடவில்லை. பொது இடங்களிலும் வீடு வீடாகவும் சென்று உங்களுக்குக் கற்றுக்கொடுத்தேன். நம் ஆண்டவர் இயேசுவின்மீது நம்பிக்கை கொள்ளுமாறும், மனம்மாறி கடவுளிடம் வந்து சேருமாறும் நான் யூதரிடமும் கிரேக்கரிடமும் வற்புறுத்திக் கூறினேன். இப்போதும் தூய ஆவியாருக்குக் கட்டுப்பட்டு நான் எருசலேமுக்குச் செல்கிறேன். அங்கு எனக்கு என்ன நேரிடும் என்பது தெரியாது. சிறை வாழ்வும், இன்னல்களும் எனக்காகக் காத்திருக்கின்றன என்று தூய ஆவியார் ஒவ்வொரு நகரிலும் என்னை எச்சரித்து வருகிறார். என்னைப் பொறுத்த வரையில் எனது உயிரை ஒரு பொருட்டாக நான் மதிக்கவில்லை. இறையருளைப் பற்றிய நற்செய்திக்குச் சான்று பகருமாறு ஆண்டவர் இயேசு எனக்குக் கொடுத்த பணியை நிறைவேற்றி என் வாழ்க்கை ஓட்டத்தை முடிப்பதே என் விருப்பம். இதுவரை நான் உங்களிடையே வந்து இறையாட்சியைப் பற்றிப் பறைசாற்றினேன். ஆனால் இனிமேல் உங்களுள் எவரும் என் முகத்தைப் பார்க்கப் போவதில்லை என்று நான் அறிவேன். உங்களுள் எவரது அழிவுக்கும் நான் பொறுப்பாளியல்ல என்று இன்று நான் உங்களிடம் தெரிவித்துக்கொள்கிறேன். கடவுளின் திட்டம் எதையும் நான் உங்களுக்கு அறிவிக்காமல் விட்டுவிடவில்லை."

**இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.**
**இறைவா! உமக்கு நன்றி.**

**பதிலுரைப்பாடல்:**

**திருப்பாடல்கள்: 68 : 9 – 10, 19 – 20 (பல்லவி: 32a)**

**பல்லவி: உலகிலுள்ள அரசர்களே! கடவுளைப் புகழ்ந்தேத்துங்கள்.**

**அல்லது: அல்லேலூயா.**

1. கடவுளே! உம் உரிமையான நாட்டின்மீது மிகுதியாக மழைபொழியச் செய்தீர். வறண்டு போன நிலத்தை மீண்டும் வளமாக்கினீர். உமக்குரிய உயிர்கள் அதில் தங்கியிருந்தன. கடவுளே! நீர் நல்லவர். எனவே ஒடுக்கப்பட்டோர்க்கு மறுவாழ்வு அளித்தீர். பல்லவி

2. ஆண்டவர் போற்றி! போற்றி! நாளும் நம்மை அவர் தாங்கிக்கொள்கின்றார். இறைவனே நம் மீட்பு. நம் இறைவனே மீட்பளிக்கும் கடவுள். நம் தலைவராகிய ஆண்டவர்தாம் இறப்பினின்று விடுதலை தர வல்லவர். பல்லவி

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி: யோவான் 14 : 16**

அல்லேலூயா, அல்லேலூயா!
உங்களோடு என்றும் இருக்கும்படி தந்தை மற்றொரு துணையாளரை உங்களுக்குத் தருமாறு நான் தந்தையிடம் கேட்பேன். தந்தை அவரை உங்களுக்கு அருள்வார்.
அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம்:**

தந்தையே, நீர் உம் மகனை மாட்சிப்படுத்தும்.

**யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்: 17 : 1 – 11**

அக்காலத்தில் இயேசு வானத்தை அண்ணாந்து பார்த்து வேண்டியது: “தந்தையே, நேரம் வந்துவிட்டது. உம் மகன் உம்மை மாட்சிப்படுத்துமாறு நீர் மகனை மாட்சிப்படுத்தும். ஏனெனில், நீர் அவரிடம் ஒப்படைத்தவர்கள் அனைவருக்கும் அவர் நிலைவாழ்வை அருளுமாறு மனிதர் அனைவர்மீதும் அவருக்கு அதிகாரம் அளித்துள்ளீர். உண்மையான ஒரே கடவுளாகிய உம்மையும் நீர் அனுப்பிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நிலைவாழ்வு. நான் செய்யுமாறு நீர் என்னிடம் ஒப்படைத்திருந்த வேலையைச் செய்து முடித்து நான் உம்மை உலகில் மாட்சிப்படுத்தினேன். தந்தையே, உலகம் தோன்றும் முன்பே நீர் என்னை மாட்சிப்படுத்தியுள்ளீர். இப்போது உம் திருமுன் அதே மாட்சியை எனக்குத் தந்தருளும். நீர் இவ்வுலகிலிருந்து தேர்ந்தெடுத்து என்னிடம் ஒப்படைத்த மக்களுக்கு நான் உமது பெயரை வெளிப்படுத்தினேன். உமக்கு உரியவர்களாய் இருந்த அவர்களை நீர் என்னிடம் ஒப்படைத்தீர். அவர்களும் உம் வார்த்தைகளைக் கடைப்பிடித்தார்கள். நீர் எனக்குத் தந்தவை அனைத்தும் உம்மிடமிருந்தே வந்தவை என்பது இப்போது அவர்களுக்குத் தெரியும். ஏனெனில் நீர் என்னிடம் சொன்னவற்றையே நான் அவர்களிடமும் சொன்னேன். அவர்களும் அதை ஏற்றுக்கொண்டு நான் உம்மிடமிருந்து வந்தேன் என்பதை உண்மையில் அறிந்துகொண்டார்கள். நீரே என்னை அனுப்பினீர் என்பதையும் நம்பினார்கள். அவர்களுக்காக நான் வேண்டுகிறேன். உலகிற்காக அல்ல, மாறாக நீர் என்னிடம்

ஒப்படைத்தவர்களுக்காகவே வேண்டுகிறேன். அவர்கள் உமக்கு உரியவர்கள். என்னுடையது எல்லாம் உம்முடையதே. உம்முடையதும் என்னுடையதே. அவர்கள் வழியாய் நான் மாட்சி பெற்றிருக்கிறேன். இனி நான் உலகில் இருக்கப்போவதில்லை. அவர்கள் உலகில் இருப்பார்கள். நான் உம்மிடம் வருகிறேன்.''

**இது கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.**
**கிறிஸ்துவே! உமக்குப் புகழ்.**

**சிந்தனைக்கு:**

நம் இறைவன் இயேசு நமக்காக செபிக்கும் இறைவன் என்பதை இங்கு பார்க்கிறோம். இயேசு நமக்கு நற்போதனை, நல்ல அறிவுரை, நல்ல ஆலோசனை வழங்கும் இறைவன் என்பதை அவரது மலைப் பொழிவிலிந்து அறிந்தோம். இந்த இயேசு நமக்கு நற்சுகம் தரும் தெய்வம் என்பதை அவர் நோயைக் குணப்படுத்திய நிகழ்ச்சிகளில் கண்டோம். பாவத்தை மன்னித்து பாவியை அரவணைத்தபோது, நம் தெய்வம் அன்பும் இரக்கமும் உள்ளவர் என்று அறிகிறோம். நமக்காக பாடுகள்பட்டு இறந்தபோது இந்த இயேசு நம்மீது வைத்த எல்லையில்லா அன்பை அனுபவிக்கிறோம். அவ்வாறே நம் இயேசு நமக்காகச் செபிக்கும் தெய்வம். நாம் எல்லோரும் நிலைவாழ்வைப் பெற வேண்டும், நம் வாழ்வு தந்தை இறைவனுக்கு மாட்சியைக் கொண்டுவர வேண்டும், இவ்வுலகில் நாம் வாழும்போது எல்லா பாதுகாப்புடனும் வாழ வேண்டும் என்பதற்காகச் செபிக்கிறார். நம்மில் யாரையும் இழப்பதற்கோ, யாரும் அழிந்து போவதையோ நம் இயேசு விரும்பவில்லை. ஆகவே செபிக்கிறார்.

இவ்வாறு நமக்காக பலத்த குரல் எழுப்பி இயேசு நமக்காக செபிப்பதன் மூலம், மனிதர்கள் நாம் செபிக்க வேண்டும் என்பதைச் சொல்லுகிறார். செபமே எல்லாவற்றிலும் சக்தி வாய்ந்தது என்பதை எடுத்துரைக்கிறார். நம் செபத்தில் வலிமை என்ன? எவ்வளவு நம்பிக்கையோடு செபிக்கிறோம். இயேசுவோடு செபிப்போம். இனிது வாழ்வோம். வாழ்த்துக்கள். ஆசீர்.

**********